அசல்

23.12.18. குமாரசாமி.

அசல் -1 நகல் - இல்லை.

Copied தக. vol. B' 307-314

உ

சிவமயம்

கனக்கம்பாளையம்
23-12-18

பிரம்மஸ்ரீ ஐயாவவர்கள் பாதாரவிந்தங்க
ளுக்குப் பண்டாரம் வணங்கி எழுதிக்கொண்டிருப்பது.
தங்கள் ஆசியால் க்ஷேமம். க்ஷேமத்தை அ
டிக்கடி தெரியவிரும்புகிறேன்.
தாங்கள் 14-12-918ல் எழுதியகடி
தங்கிடைக்கப் பெற்று அகமிக மகிழ்ந்தேன்.
ஸ்ரீஅவிநாசியை விட்டு யான் நீங்கியதற்குக்
காரணம்: சபைக்கு வேணுமில்லாததால் மகா
ள. ஸ்ரீ அப்பண்செட்டியார் ஒருவரே என்னுடை
த் திருச்செலவுக்கு ~~கொ~~ ~~ரை~~ பாடின்றிக் கொ
டுத்து வந்த~~னர்~~ ~~ரீ~~. சபையில் பாடசாலை
யேற்படாததால் தொழிலில்லாமல் கர்ச்சுவெ
ர இஷ்டமில்லாமலிருந்தேன். அதுசமய
ம் இங்குள்ள ஊரார் பாடசாலைக்கு உபா
த்தியாயரில்லையெனப் பண்டாரம் வந்து
தொந்தரை செய்தார்கள். அதனால் இங்கேயே
தங்கிவிட்டேன்.
அடியேனுக்கு உத்தியோகம் செய்வி
த்த தங்கள் பூர்ணகிருபை யிருப்பதற்கு
என்னதடை. அடியேனுய்ந்தேன்.
தற்காலம் இவ்வூரிலேயே ரூ. 20 சம்
பளம் கிடைக்கிறது. ஆதலால் மயிலா
ப்பூர் வேலை தற்காலம் பார்த்தாலும் முதலான

அசல்

23.12.18. குமாரசாமி.

அசல் - 1 நகல் - இல்லை.



செலவிற்கு அங்கேயும் வரவு கட்டா
து. தற்காலம் இங்கேயே யிருக்கிறேன்.
கொடுமை விஷயம் இன்னும் அதுமா
த்திரமல்ல பிறகு ஆதலாலும், அதுபல
வித வெளி காரியங்களில் கிடையாதலாலும்
அதற்கே மனம் நாடுகிறது. அப்பாட
சாலைக்கு உரியார்களைத் தெரிந்து உ
டனே தங்களுக்கு எழுதுகிறேன்.

நான் படிப்பு விஷயத்தில் உண்மை
யில் நான் தேர்ந்தேன்றுத் தம்பிரான். எந்த
இலக்கண இலக்கியங்களும் ஒழுங்காயிடைக்
கேட்டதேயில்லை. ஆயினும் பிறர்க்குத்
தெரிவிக்கத் தாங்கள் கேட்டதை தெரிந்தேன்.

இலக்கணம் "நன்னூல் முழுதையும் என்
திருத்தியின் செய்யபடி பார்த்துக்கொண்டேன்
இதர யாப்பியல் காரிகையிலும், சில
வசன இலக்கணங்களிலும் சிறிது தெரிந்தேன்.
இலக்கியங்களில், பெரிய புராணம், கந்தபுரா
ணம், திருவிளையாடல், காஞ்சிப் புராணம், சேதுப்
ப் புராணம், பிரபுலிங்கலீலை, கோயிற்புராணம்
ணம், இன்னும் சில தலபுராணங்கள்.

நைடதம், பாரதம்; இராமாயணம் முதலியவும்.
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீ மெய்கண்ட

அசல்

23.12.18. குமாரசாமி.
அசல் - 1 நகல் - இல்லை.



சுவாமிகள், ஸ்ரீ சிவ ஞானயோகிகள்
முதலிய பெரியோர்களது பிரபந்தங்களி
லுள்ள கோவை, கலம்பகம், அந்தாதி
முதலியவைகளும், வேறு கலம்பகம், அந்
தாதி முதலியவைகளும் பிறவும் படித்துள்ளேன்.
மேலும் சைவத்திருமுறைகள் பன்
னிரண்டினையும் கொஞ்சம் ஆராய்ந்தி
ருக்கிறேன். சைவசித்தாந்த சாஸ்
திரங்களிலும் என்சிற்றறிவுக் கெட்டி
யபடி உரைகளின் ஆதாரங்கொண்டும்
சோமசுந்தர நாயகர் முதலானவர்களது
வசன நூல்களாதாரங் கொண்டும்
சிறிது அறிவேன்.
சங்க நூல்களில் மணிமேகலையை டா
க்டர் * ஐயரவர்கள் எழுதிய வசனக் கதை
ச் சுருக்கத்தை ஆதாரமாய் வைத்துக்கொண்
டுதான் படித்துள்ளேன். சிலப்பதிகாரம் படித்
துவருகிறேன். புறநானூறு இரவலாகக்
கிடைத்துப் பாதி பார்த்துள்ளேன்.
பதினெண்கீழ்க்கணக்கில் திருக்குறளும்
பாடசாலைக்கு வந்த பாடல்களில், அறநெ
றிச்சாரம் முதலியனவும் படித்துள்ளேன்.
எல்லாம் என்னையாண்டருளும் முருகப்பெருமான்

அசல்

23.12.18. குமாரசாமி.

அசல் – 1 நகல் – இல்லை.

4

—சிவபெருமானையன்றி வேறு தெய்விய
த் துணையறியேன். "இக்கோவையார்
தஞ்சைவாணன்கோவை இவைகளை உரை
யுடன் தற்காலம் படித்து வருகிறேன். நிற்க.

தாங்கள் கோடிட்டுக் குறித்த
விஷயங்களை அடியில் வரும் வண்ணம்
காண்கவும். . . .

1. ஆறு நாடு என்பது கொங்கு 24 நாடு
களுள் ஒன்று. அதுவும் ஆறு உட்
பிரிவு நாடுகளை உடையது. அவை

1. சேவை நாடு (சேவூர்)
2. செவளாபுரி நாடு
3. பெரும்பழனை நாடு
4. கோவை நாடு (கோயமுத்தூர்)
5. நம்பியூர் நாடு.
6. அன்னூர் நாடு. (அன்னியூர்நாடு)

என்பனவைகளாம்.

இவற்றில் சேவை நாட்டைச் சேர்ந்தது
திருவவிநாசி. "பெரும்பழனை" என்
பது தற்காலம் பெருமாநல்லூர் என்று
சொல்லப்படுவதாம். இதில் பெரிய சிவா
லயம் ஒன்றுண்டு அதில் பல இடங்க
ளில் சிலாசாசனத்தில் "பெரும்பழனை

அசல்

23.12.18. குமாரசாமி.

அசல்-1 நகல்- இல்லை.



எனக் குறித்திருத்தல் காணலாம். இந்தல
த்துச் சுவாமி அம்மன் மீது நட்டுவர்கள்
பாடும் பண்டைய கீர்த்தனம் தெலியனவை
களில் பெரும்பழனை யென்னும் பெயர்
விளங்கி வருதலைப் பலதடவை கேட்டு
ளோன். இந் நகரம் தற்காலம் நாணிரு
க்கும் கணக்கம் பாளையத்துக்கு வடக்கில்
1½ மைல் தூரத்திலுள்ளது. ...

2- இதில் "நல்லையப் புலவர் என்பவர்
ஒருவர் இருந்திருக்கின்றனர். அவருக்கு
ப் புத்திரர் நால்வர். அவர்கள் முறையே
1. பொன்னையன் (வேலாயுதம்)
2. நஞ்சய்யன்
3. சுப்பையன்
4. தெய்வசிகாமணி. எனப் பெயர்
பெறுவர்கள். இதில் முதல்வர்க்கு வேலாயு
தம் என்பது இயற் பெயரும், பொன்னையன்
என்பது வீட்டில் அழைத்த செல்லப் பெயருமெ
னத் தெரிகிறது. இவர் உலகில் வாழ்ந்தது
இருபத்தொரு வயது தானென்றும், நல்ல
விற்பத்தியுடையாரெனவும் தெரிகிறது.
இவருக்கு ஆண் சந்ததியில்லை. ~~[illegible]~~

அசல்

23.12.18. குமாரசாமி.
அசல் -1 நகல் - இல்லை.

12 23-12-1918

~~உண்டென்றும், அவ்வம்மாள் என் ஓர் அத்தைக்கு மாமியாரென்றும் தெரிகிறது.~~

2. வடுகண்ட "நஞ்சயன்" என்பவரின் பேரன் எனது மாமனார் (மகட்கொடையார்)

3. வடுகண்ட "தம்பையன்" என்பவர் எனது தாயாரின் தந்தையார். இவர்க்கும் ஆண் சந்ததி கிடையாது.

4. வடுகண்டார் தெய்வசிகாமணியென்பவர் இவருக்கும் ஆண் சந்ததியில்லை. ஓர் பெண் மகவுண்டென்றும் அவ்வம்மாள் என் ஓர் அத்தைக்கு மாமியார் என்றும் தெரிகிறது.

மேற்கண்ட "நல்லையப் புலவர் தம்பி வடிவேல் உபாத்தியாயர் என்பவரும் இங்கு பிரபலஸ்தராக இருந்திருக்கிறார். "பொன்னையன்" என்பவரது காலம் சுமார் 200 க்கு முந்தியதெனவும் தெரிகிறது. நாங்கள் "சோழ வெள்ளாளர்" என்னும் ஜாதியார். மற்றும் வேண்டிய விஷயங்கட்கு எழுதினால் விசாரித்துத் தெரிந்தவரை எழுதுகிறேன். "பொன்னையன் என்பவர் என் தாயாரின் பெரிய தந்தை என்று தெரியவும் தெரிகிறது. இப்படிக்கு அடிமை. குமாரசாமி